மயானம் இல்லே என்று அமைச்சரிடமும், அரசிடமும் முறையிட்டிருக்கிருர்கள். மயானம் இல்லாததால் அங்கே கலவரம் ஏற்படக்கூடிய சூழ்நிலே ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த மயானம் அழிக்கப்பட்டு விட்டது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு மயானம் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலேவரவர்களே, நான், மாவட்ட ஆட்சித் தலேவரவர்கள் அளித்த விபரங்களே வைத்து பதில் சொல்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் தகவலேவைத்து, மீண்டும் மாவட்ட ஆட்சித் தலேவரைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலேவரவர்களே, கனம் அமைச்சரவர்களுக்கும் கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் இடையே இந்த கேள்வியின்மீது நடைபெற்ற விவாதத்தைப் பார்க்கும்போது, அங்கே பொதுவாக இருக்கக்கூடிய மயானத்தில் அரிசனங்களுக்கு இடம் இல்லே என்று தெரிகிறது. ஆகவே, இந்தச் சச்சரவைத் தீர்த்து வைத்து, அரிசனங்களும் அந்த மயானத்தைப் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில்—தனியாக ஏற்படுத்திக் கொடுக்காமல்—அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சச்சரவுகளேத் தீர்த்து வைத்து அந்த மக்களுக்கு நன்மை செய்வது என்ருல், அவர்களுக்கு இடமே இல்லாமல் போய்விடும். மாண்புமிகு அம்மையார் அவர்கள் நேற்று பேசும்போது கூட அரிசனங்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்கக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியின்போதே இப்படி இருந்துவந்திருக்கிறது. அப்போது அம்மையார் அவர்கள் அதைத் தடுத்திருக்கலாம். ஆனல் முடியாது. இவை எல்லாம் முடியாத காரியங்கள். இன்னும் அரிசனங்களுக்குத் தனியாக வசதி செய்துகொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தீண்டாமை முற்றிலும் ஒழிக்கப்பட்டு, எல்லோரும், சமம் என்ற நிலே ஏற்பட்டால், தனியாக இடம் ஒதுக்க வேண்டியதில்லே. அந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட இன்னும் நீண்டகாலம் ஆகும். அதுவரையில் அவர்களுக்கு நன்மைகள் செய்தாக வேண்டும். பொது மயானத்தில் அரிசன மக்களின் உடலே வைக்கக் கூடாது என்ற நிலேயே ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிருர்கள். சிக்கல்கள் ஏற்பட்டால் போலீசார் மூலம் தீர்த்து வைக்கலாம். ஆனல் தனி இடம் கொடுத்தால் சிக்கல் இல்லே என்ற காரணத்தினல் இப்படிச் செய்கிருேம்.

பூவலம்பேடு அரிசனக் குடியிருப்பு.

*418 வினு.— திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பூவளம்பேடு அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனே வழங்கும் திட்டமும், இடுகாட்டுக்கு வழி அமைக்கும் திட்டமும் மேலும் காலதாமதம் ஆவதேன்?

1974 மார்ச் 14]

(இ) இவை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) and (இ) கும்முடிப் பூண்டித் துணை வட்டம், பூவளம்பேடு அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டுமனை மற்றும், மயானத்திற்குப் பாதை அமைப்பதற்காக நிலம் கையகப் படுத்தும் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த மாதிரி நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்குவதிலும், இடு காடடுக்கு வழி அமைத்துக் கொடுக்கும் திட்டமும் பல்லாண்டு காலமாக பரிசீலனையில் இருக்கின்றன. இவைகளுக்கென்று ஒரு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தி, எவை எவை நீண்ட காலமாக பரிசீலனையில் இருக்கின்றனவோ, அவைகளை விரைவு படுத்தி நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தாமதத்திற்குக் காரணம் நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஏற்படுகின்ற சிக்கல்தான் பெரிதாக இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள் தகராறு இல்லாமல் கொடுத்து விட்டால் இந்தத் தாமதம் பெரிதும் தவிர்க்கப்பட்டு விடும். தாமதத்தைத் தவிர்க்க எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

வைகைக் கால்வாய் சீர் அமைப்பு.

*419 வினா.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், 1973–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதி அன்று வினா எண் 529-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வைகைக் கால்வாய் சீர் அமைப்பு வேலை எந்த அளவுக்கு நடை பெற்று இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்த வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் ஏறத்தாழ 10 ஆண்டு காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, இந்த ஆண்டிலாவது முடிவடைகின்ற அளவுக்கு இத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, திட்ட வேலைகளுக்கு 1968–ம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரம் முடிவடைவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*–465ம் பக்கத்தில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.